தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 98/ந/2022
நாள் 09.11.2022

| | | |
|---|---|---|
| திரு. ஆ.முருகன்,<br>அரியலூர். | – | முறையீட்டு மனுதாரர். |
| ஆணையாளர்,<br>அரியலூர் நகராட்சி. | – | எதிர் மனுதாரர் |

அரியலூர், எண்ணெய்க்காரத் தெரு, கதவு எண் 50 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ஆ.முருகன் என்பவரின் 08.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.08.2022 அன்று பெறப்பட்டு 98/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

அரியலூர், எண்ணெய்க்காரத் தெரு, கதவு எண் 50 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ஆ.முருகன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“கடந்த 06.08.2021 அன்று நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு ஒரு புகார் மனுவை அனுப்பி இருந்தேன். அதில் அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான கல்லேரிக்கு ஜெயங்கொண்டம் சாலையில் இருந்து மழை தண்ணீர் வரும் வாய்க்கால் இருந்தது. இந்த ஏரி 150 ஆண்டுகள் பழமையானது. அங்கு உள்ளவர்களுக்கு இதுவே குடிநீர் ஆதாரமாக இருந்தது.

தற்போது இந்த வாய்க்கால் அருகில் வீடு கட்டியவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு காணாமல் போய் விட்டது. இந்த ஏரியின் வடபுறக் கரையில் மற்றும் மேற்புறக் கரையில் கட்டிடங்கள் பல லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

நீர் நிலைகளுக்கு அருகில் இது போன்ற கட்டிடங்கள் கட்ட உயர்நீதிமன்றம் ஏற்கனவே தடை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்ட நிலையில் அரியலூர் நகராட்சி நிர்வாகம் முறையான விதி முறைகளை கடைபிடிக்காமல் மேற்படி பகுதியில் கட்டிடங்கள் கட்ட தவறான அனுமதி கொடுத்துள்ளது. இது ஆவணங்களின் ஆய்வில் தெரியவரும். மேலும், இவைகள் DTCP அப்ரூவல்

வாங்கப்படாதவை. தற்போது இந்த ஏரிக்கு மழைநீர் வரும் வாய்க்கால் அடைபட்டுள்ளதால் ஏரியில் நீர் தேங்குவது இல்லாமல் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விட்டது. இதற்கு முழு காரணம் நகராட்சி அலுவலர்களின் முறைகேடான வரைபட அனுமதி தான்.

மேலும், அரியலூர் நகராட்சிக்கு உட்பட்ட ஐயப்ப நாயக்கன் ஏரி, வண்ணாங்குட்டை, பள்ளேரி ஆகியவை தூர் வாரி சுத்தம் செய்து நான்கு புறமும் கரையை பலப்படுத்தி நடைபாதை அமைத்திட ரூ 156/– இலட்சம் மதிப்பீட்டில் கடந்த 2017, 2018 ஆம் ஆண்டில் KFW திட்டத்தின் கீழ் டெண்டர் விடப்பட்டு 04.01.2018–ல் திரு.நா.பிரேம்குமார் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. வேலை ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்பட்டதாக மேற்படி நபருக்கு 156/– இலட்சம் ரூபாய் அரசு பிடித்தம் போக நகராட்சியில் இருந்து வழங்கப்பட்டது.

இதில் வண்ணாங்குட்டை, ஐயப்ப நாயக்கன் ஏரி ஆகியவை வேலை முடிந்துவிட்டது. பள்ளேரியில் வேலையே செய்யாமல் ஏரியின் மேற்கு பக்கம் ரூ 7/– இலட்சம் செலவில் சுவர் வைத்துவிட்டு ரூ 60/– இலட்சம் செலவு செய்ததாக பில் போட்டு பணம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் மட்டும் 60/– இலட்சம் ரூபாய் மக்கள் வரி பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இதற்கு காரணமானவர்கள் அரியலூர் நகராட்சி ஒவர்சீயர், பொறியாளர், ஆணையர் ஆகியோர். இது சம்பந்தமாக அரசு பொறியாளர் (PWD) அவர்களை வைத்து ஆய்வு செய்தால் உண்மை தெரிய வரும்.

மேலும் கடந்த 23.09.2016 முதல் அரியலூர் நகராட்சியில் ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் 124 பேர் Ourland Engineering Works Pvt Ltd. Chennai என்ற நிறுவனம் மூலம் நியமிக்கப்பட்டு தூய்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். அதற்காக அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 13 இலட்சம் சம்பளம் வழங்கப்படுகிறது. இது இன்றைய தேதி வரை நடைமுறையில் உள்ளது. ஆனால் உண்மையில் 50 நபர்கள் மட்டுமே தூய்மை பணி செய்து வருகிறார்கள். மீதம் உள்ள 74 பேர் போலியாக பெயர் சேர்க்கப்பட்டு இன்று வரை அவர்களுடைய சம்பளம் என்று அதிகாரிகளால் கையாடல் செய்யப்பட்டு வருவதாக தெரிகிறது. இதுகுறித்து 23.09.2016 முதல் 31.05.2022 வரை அந்த 124 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களின் பணி பதிவேட்டை ஆய்வு செய்தால் அப்படி ஒரு பெயரில் ஒரு நபர் இருக்க மாட்டார். அவ்வளவும் மோசடியாக நடந்து வருகிறது. இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ 7/– இலட்சம் சம்பளம் போட்டதாக பணம் கையாடல் நடைபெறுவதாக தெரிகிறது. இதுகுறித்து அரியலூர் நகராட்சி சுகாதார ஆய்வாளர் அலுவலக ஆவணங்களை ஆய்வு செய்தால் ஊழலும் உண்மையும் வெளிவரும்.

மேலே கண்ட புகாரை அனுப்பி இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக நான் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிய முதல் புகார் கடிதம் தேதி 06.08.2021. அந்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என கேட்டு நான் அனுப்பிய கடித தேதி 29.09.2021. இரண்டு கடிதங்களுக்கும் பதில் இல்லாததால் 20.12.2021–ல் மீண்டும் ஒரு மேல் முறையீடு கடிதம் தேதி 20.12.2021.

20.12.2021 தேதிய எனது கடிதத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் 20.01.2022–ல் தங்களது மனு நடவடிக்கைக்காக மண்டல நிர்வாக இயக்குநர் தஞ்சாவூர் மற்றும் அரியலூர் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டதாக (ந.க.எண் 18502/2021/டிபி–2, நாள் 24.08.2021) பதில் கடிதம் அனுப்பினார்கள்.

அதன் பிறகும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் 11.04.2022–ல் தஞ்சை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு அனுப்பிய முறையீட்டு கடிதம் தேதி 11.04.2022. அந்த கடிதத்திற்கு தஞ்சை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் இருந்து ந.க.எண் 1116/2022/அ 4 நாள் 22.04.2022 தேதியிட்ட பதில் கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னையில் இருந்து அப்படி (ந.க.எண் 18502/2021/டிபி–2, 24.08.2021) எந்த கடிதமும் இவ்வலுவலகத்தால் பெறப்படவில்லை என பதில் தெரிவித்தனர். உடன் காலத்தில் கடந்த 27.04.2022 அன்று மீண்டும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு தஞ்சை மண்டல இயக்குநரின் 22.04.2022 ஆம் தேதிய கடிதம் குறித்து மனு அனுப்பப்பட்டது. அதற்கு 10.05.2022ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னையில் இருந்து தபால் அனுப்பப்பட்டதாக விளக்க கடிதம் அனுப்பினர்.

இப்படி பொது நலனுக்காக அரசு பணத்தை மோசடியாக வேலையே செய்யாமல் ஏமாற்றப்பட்டுள்ளது என்பதற்கு இந்த இரு அலுவலகங்களின் கடித போக்குவரத்தே முக்கிய ஆவணம். இதில் சம்பந்தப்பட்ட அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் இருந்து எவ்வித கடிதமும் இதுவரை எனக்கு அனுப்பப்படவில்லை என்பது அவர்கள் செய்த மோசடியை உண்மையாக்குகிறது.

06.08.2021 முதல் இன்றைய தேதிவரை இதுகுறித்து சிறு விசாரணைகூட நடத்தாமல் நகராட்சி நிர்வாகத் துறை ஆணையர், சென்னை, மண்டல நகராட்சி இயக்குநர், தஞ்சை ஆகியோர் மெத்தனமாக இருப்பது ஊழலுக்கும், மோசடிக்கும் துணை போவதற்கு சமம். இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் தங்களால் விசாரிக்கப்பட்டு, தண்டனை பெற தகுதியான அலுவலர்கள். வேறு நியாயம் கிடைக்காததால் தங்களிடம் முறையிடுகிறேன். நான் அரியலூர் நகராட்சிக்கு வீட்டு வரி தவறாது கட்டி வருபவர். மக்கள் வரி பணம் இப்படி மோசடி செய்யப்பட்டுள்ளதில் என் பணமும் பங்கு உள்ளது என்ற அடிப்படையில் இந்த புகார் மனுவை தங்களிடம் தாக்கல் செய்கிறேன். இந்த மனுவையும் இதில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களையும் மேற்படி நடுவம் ஆய்வு செய்து அரியலூர் நகராட்சி அலுவலகத்திலுள்ள இது சம்மந்தமான ஆவணங்களை ஆய்வு செய்து நகராட்சிக்கு இழப்பீடு ஏற்படுத்திய மோசடிக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது உரிய துறை சார்ந்த நடவடிக்கை எடுத்திடவும் திரு. நா. பிரேம்குமார் என்பவரிடமிருந்து வேலையே செய்யாமல் மோசடியாக பெற்ற பணம் ரூ 60 இலட்சத்தை மீட்டு நகராட்சி வருவாய் கணக்கில் சேர்த்திடவும், ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் ஆவணங்களை ஆய்வு செய்து இல்லாத நபர்களை சேர்த்து அதன் மூலம் நடைபெற்ற பல கோடி மோசடியை கண்டுபிடித்து மோசடிக்கு உடந்தையாக இருந்த அரியலூர் நகராட்சி சுகாதார ஆய்வாளர், ஆணையர், தனியார் ஒப்பந்த நிறுவனம் ஆகியோர் மீது உரிய கிரிமினல் நடவடிக்கை மற்றும் துறைரீதியான நடவடிக்கை எடுத்து உத்திரவிட பணிவுடன் பிரார்த்திக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.07.2022 நாளிட்ட கடிதம் மூலம் அரியலூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

அரியலூர் நகராட்சி ஆணையாளர் தனது 26.10.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் 10.05.2022 நாளிட்ட கடிதத்தில் அரியலூர் நகராட்சியில் வணிக மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு முறையற்ற வகையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், பல இலட்சம் ரூபாய் இழப்பீடு

ஏற்பட்டுள்ளதாகவும் புகார் வரப்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. புகாரில் தெரிவிக்கப்படும் இடம் வ.உ.சி. தெருவில் GG.Educational Trust என்ற கல்வி நிறுவனத்திற்கு கட்டிடம் கட்டிக்கொள்ள நகர ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் 22/2021/அ.மா, நாள் 28.04.2021 அவர்களால் உரிய தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டு, அதனை தொடர்ந்து அரியலூர் நகராட்சியின் உரிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட புகாரில் கல்லேரி அருகில் வரத்து வாய்க்காலில் சுற்றுசுவர் எழுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதால், ஜெயங்கொண்டம் சாலையிலிருந்து கல்லேரிக்கு செல்லும் நீர் வரத்து வாய்க்காலினை நில அளவை செய்துதரக்கோரி நில அளவை வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி ஆக்கிரமிப்பு தொடர்பாக வரப்பெற்ற வட்டாட்சியரின் 26.10.2022 நாளிட்ட அறிக்கையில் சர்வே எண். 584/3, 0.10.80 ஏர்ஸ் பரப்பளவில் தற்காலிக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. மேலும் சர்வே எண் 585 மற்றும் 600 ஆகிய புல எண்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி சர்வே வண்.584/3ல் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்பினை 15 தினங்களுக்குள் அகற்றுமாறு மேற்படி பள்ளி நிர்வாகத்திற்கு அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

<u>பொறியியல் பிரிவு</u>

அரசாணை எண்.32, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.04.2017ன்படி, KFW திட்டத்தின் கீழ் அய்யப்பன் ஏரி ரூ 65.00 இலட்சம், வண்ணான்குட்டை ஏரி ரூ 24.00 லட்சம் மற்றும் பள்ளி ஏரி ரூ 67.00 இலட்சத்திலும் தூர்வாரி கரையை பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு கடித ந.க.எண்.31441/2017/WS3, நாள் 21.04.2017ன்படி TNUDFன் அரசு மானியமாக ரூ 109.20 இலட்சமும், நகராட்சி பங்களிப்பாக ரூ 15.60 இலட்சமும் மற்றும் கடன் தொகையாக ரூ 31.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப்பொறியாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.35683/2017/DOII, நாள் 09.07.2017ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 20.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ந.பிரேம்குமார், வெங்கடரமணபுரம், அரியலூர் என்ற ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி 30.12.2017ன்படி 04.01.2018 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. அதற்கான மன்ற ஒப்புதல் நகர்மன்ற தீர்மானம் எண். 181, நாள் 13.03.2018ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | நிர்வாக அனுமதி | செலவினத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | அய்யப்பன் ஏரி நீர்நிலை மேம்படுத்தும் பணி | 65.00 | G.O.(MS) No.32, MAWS Dated 05.04.2017 | 65.00 |
| 2 | பள்ளேரி நீர்நிலை மேம்படுத்தும் பணி | 67.00 | | 67.00 |
| 3 | வண்ணான்குட்டை நீர்நிலை மேம்படுத்தும் பணி | 24.00 | | 24.00 |
| | கூடுதல் | 156.00 | | 156.00 |

இதில் புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட பள்ளி ஏரி நீர்நிலை மேம்படுத்தும் பணியானது திட்டமதிப்பீட்டின்படி உரிய நடைமுறைகளை பின்பற்றி அரசு பொறியியல் கல்லூரியில் உரிய வடிவமைப்பு பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி, நீர்நிலை மேம்படுத்தும் பணி நடைபெறும்போது உயர்அதிகாரிகளால் அவ்வவ்போது ஆய்வு செய்யப்பட்டும், அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொண்டதற்கான அளவுகள், அளவு புத்தகத்தில் (M-Book) பதியப்பட்டு உரிய நடைமுறைகளை பின்பற்றி பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

<u>பொதுசுகாதார பிரிவு</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் Roc.No.1317/பி3/2016, நாள் 02.06.2016 செயல்முறை உத்தரவின்படி 124 தூய்மை பணியாளர்கள் கொண்டு, உரிய ஒப்பந்தப்புள்ளி பெற்று தூய்மை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி அரியலூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 1358, நாள் 22.07.2016–ல் தனியார் மூலம் 124 பணியாளர்கள் கொண்டு 12.09.2016–ல் உரிய ஒப்பந்தப்புள்ளி பெற்று Our Land Engineerig Works என்ற நிறுவனத்திற்கு அரியலூர் நகராட்சி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் 373/2012/2012 நாள் 22.09.2016 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேலும் வருடவாரியாக மூன்று ஆண்டுகளுக்கு இதே எண்ணிட்ட உத்தரவு வழங்கப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் 124 தூய்மை பணியாளர்கள் பணியாற்றி ஒப்பந்த காலம் 22.09.2019 அன்றுடன் முடிவுற்றதை அடுத்து 06.08.2019 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, சில குறைபாடுகள் கண்டறியப்பட்டு கோப்பு மீள அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அலைபேசி செய்தியின் பேரில், மேலும் ஆறுமாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் 02.03.2020 மற்றும் 15.06.2020 அன்று மூன்று மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்யப்பட்டது; மேலும் ஏற்கனவே உள்ள ஒப்பந்த நிறுவனம் மூலமே மறுஒப்பந்தப்புள்ளி கோரும் வரை பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள அரியலூர் நகராட்சி நகர்மன்ற அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து 01.08.2020 மற்றும் 01.05.2021 அன்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. 124 தனியார் ஒப்பந்த பணியாளர்களில் தூய்மை பணி, கழிவறை சுத்தம் செய்தல் பணி, உரக்கிடங்கு பணி, அலுவலகப் பணி, பொதுசுகாதார ஒட்டுநர், தூய்மைப் பணி மேற்பார்வையாளர் மற்றும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களும் அடங்குவர் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் அரியலூர் நகராட்சி ஆணையரும் 01.11.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.10.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.ஆ.முருகன், 01.11.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

(5) எதிர்மனுதாரரான அரியலூர் நகராட்சி ஆணையாளர் 01.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் அலுவலகப் பணி நியமித்தமாக ஆஜராகவில்லை அவருக்கு பதிலாக அரியலூர்

நகராட்சியில் பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றும் திரு.A.பிரசாத் மற்றும் இளநிலை உதவியாளராகப் பணியாற்றும் திரு.து.மகாராஜா ஆகியோர் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

"அரியலூர் நகராட்சி, அம்மா குளம் செல்லும் சாலை, கல்லேரி அருகில் வரத்து வாய்காலில் G.G Educational Trust என்ற கல்வி நிறுவனத்தினரால் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது என புகார் மனு பெறப்பட்டதைத் தொடர்ந்து, மேற்கண்ட இடம் நகராட்சி அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட கல்வி நிறுவனத்தின் கட்டடம் DTCP Approval பெறப்பட்டு கட்டப்பட்டுள்ளது. அதே போன்று நகராட்சியின் கட்டட அனுமதி 22.6.2021 அன்று வழங்கப்பட்டுள்ளது.

வாய்க்கால் ஆக்கிரமிப்பு குறித்த புகாரையொட்டி, நில அளவை செய்து தரக்கோரி வட்டாட்சியரிடம் கோரப்பட்டு, அங்கு சர்வே எண் 584/3 0.10.80 ஏர்ஸ் பரப்பளவில் தற்காலிக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை கண்டறியப்பட்டது. அதனை 15 தினங்களுக்குள் அகற்றிடுமாறு மேற்கண்ட கல்வி நிறுவனத்திற்கு அறிவிப்பு வழக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள வண்ணான்குட்டை ஏரி, பள்ளி ஏரி மற்றும் அய்யப்பன் ஏரி ஆகியவற்றை தூர்வாரி கரையை பலப்படுத்த நகராட்சி ஆணையரின் உத்தரவுக் கடிதம் நாள் 21.4.2017ன்படி அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விதிகளின்படி குறைவாக ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய ஒப்பந்ததாரருக்கு 4.1.2018 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள 124 தூய்மைப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு Bio Metric Attendance முறை அரியலூர் நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேற்கண்ட பணியாளர்களுக்கான மாத ஊதியம் ECS மூலம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு, அந்த ஒப்பந்ததாரர் மூலம் மேற்கண்ட பணியாளர்களின் வங்கி கணக்குகளில் அவர்களின் மாத ஊதியம் வரவு வைக்கப்படுகிறது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். வங்கி கணக்கு தொடர்பான Statement நகல் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும் எங்களால் சமர்ப்பிக்கப்படும் அரியலூர் நகராட்சி ஆணையரின் 26.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, அரியலூர் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

அரியலூர் நகராட்சியை சார்ந்த மனுதாரர் திரு.ஆ.முருகன் என்பவர் தனது 08.07.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

(i) அரியலூர் நகராட்சிக்குட்பட்ட கல்லேரிக்கு நீர்வரத்து வரும் வாய்க்கால் அருகில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டியுள்ளதாகவும், மேற்படி பகுதியில் கட்டடங்கள் கட்ட அரியலூர் நகராட்சியால் தவறான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும்,

(ii) ஐயப்பன் நாயக்கன் ஏரி வண்ணான் குட்டை ஏரி மற்றும் பள்ளி ஏரி ஆகியவை தூர்வாரி ஏரிகளை சுத்தப்படுத்திட பணியே செய்யாமல் ஒப்பந்ததாரர் திரு.நா.பிரேம்குமார் என்பவருக்கு நகராட்சியால் முறைகேடாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது மற்றும்

(iii) நகராட்சியால் 124 ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களின் நியமனத்தில் 50 நபர்கள் மட்டும் பணியமர்த்தப்பட்டு மீதமுள்ள 74 நபர்களுக்கு போலியாக சம்பளம் வழங்குவதன் மூலம் அரியலூர் நகராட்சி அலுவலர்களால் பணம் கையாடல் செய்யப்படுகிறது என புகாராக தெரிவித்து, நகராட்சியின் உரிய அலுவலர்களின் மீதும், ஒப்பந்ததாரர் மீதும் உரிய நடவடிக்கையினை எடுக்கக் கோரியுள்ளார்.

- அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரியலூர் தெற்கு கிராமம் புல எண்கள் 585/3B, 6A, 6B, 6Cல் 17238.90 ச.மீ பரப்பளவில் கோல்டன் கேட்ஸ் குளோபல் (CBSE) பள்ளிக் கட்டடம் கட்ட அரியலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்குநரின் 28.04.2021 நாளிட்ட தொழில்நுட்ப இசைவுடனும் மற்றும் அரியலூர் நகராட்சியின் 22.06.2021 நாளிட்ட கட்டட அனுமதி உத்தரவுடன் முறையாக கட்டடம் கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

- கல்லேரி குட்டைக்கு வரும் நீர்வரத்து வாய்க்காலில் ஆக்கிரமிப்பு தொடர்பாக அரியலூர் நகராட்சியின் நில அளவையர் பிரிவு வட்டாட்சியரால் 26.10.2022 அன்று அளவுப்பணி மேற்கொண்டு, புல எண் 584/3ல் வடபுறம் 0.10.80 ஏர்ஸ் பரப்பளவிற்கு G.G.Educational Trust-யால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற வட்டாட்சியரின் அறிக்கையினை தொடர்ந்து, மேற்படி ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்திட வேண்டும் என்கிற தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 182 (1) மற்றும் 362ன்படி அறிவிப்பு அரியலூர் நகராட்சி ஆணையாளரால் 26.10.2022 அன்று மேற்படி டிரஸ்டுக்கு வழங்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

- அரசாணை நிலை (எண்) 32, ந.நி (ம) கு.வ. துறை நாள் 05.04.2017ல், அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான நீர்நிலைகளை மேம்படுத்தும் பணிகளை KFW (German Bank for Development) திட்டத்தின் கீழ் அய்யப்பன் ஏரி ரூ 65 இலட்சம், பள்ளேரி ஏரி ரூ 67 இலட்சம் மற்றும் வண்ணான்குட்டை ஏரியினை ரூ 24 இலட்சம் என ஆக மொத்தம் ரூ 156 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் நீர்நிலைகளை மேம்படுத்திட மொத்தம் ரூ 156 இலட்சம் நிர்வாக ஆணையாக அரசு வெளியிட்டதைத் தொடர்ந்து, சென்னை, நகராட்சிகள் நிர்வாக இயக்குநரின் 21.04.2017 நாளிட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளரின் 06.09.2017 தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி வெளியிட்டு, குறைந்த மதிப்பு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.நா.பிரேம்குமார் என்பவருக்கு பணி ஆணை

வழங்கப்பட்டதையும் இச்செயலுக்கு நகர்மன்ற ஒப்புதல் முறையாக பெறப்பட்டுள்ளதும் ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது. ஒப்பந்ததாரர் மேற்கொண்ட பணிகள் அவ்வப்போது உயர்அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டுள்ளதையும், பணி மேற்கொண்டதற்கான அளவுகள் அளவு புத்தகத்திலும் (Measurement Book-M Book) முறையாக பதியப்பட்டு அதனடிப்படையில் உரிய நடைமுறைகளை பின்பற்றி பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளதை ஆணையாளர் சமர்ப்பித்துள்ள நகராட்சி அலுவலக ஆவணங்கள் மற்றும் மேற்காணும் மூன்று நீர்நிலைகளை மேம்படுத்தியபின் சமர்ப்பித்துள்ள புகைப்படங்களின் மூலம் தெரிய வருகிறது.

- 18 வார்டுகள் மற்றும் 93 தெருக்களைக் கொண்ட இரண்டாம் நிலை அரியலூர் நகராட்சியில் வீடுகளில் குப்பை சேகரிக்கவும் நுண்ணுயிர் செயலாக்கம் மையத்தின் (MCC) மூலம், குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உரமாக்குதல் (DCC), திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள அரியலூர் நகராட்சியில் அரசாணை (நிலை) எண் 69, நநி (ம) கு.வ.துறை நாள் 04.05.1998–ல் ஒப்பந்தப்புள்ளி மூலம் 124 ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களை நியமனம் செய்ய ஆணை வெளியிட்டதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக ஆணையரின் 02.06.2016 நாளிடப்பட்ட செயல்முறை ஆணையின்படி ஒப்பந்தப்புள்ளி மூலம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான Ourland Engineering Works என்கிற நிறுவனம் மூலம் 124 தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அரியலூர் நகராட்சி ஆணையாளரின் 22.09.2016 நாளிட்ட பணி உத்தரவுபடி 3 வருடங்களுக்கு பணியமர்த்தப்பட்டு, 22.09.2019 அன்றுடன் ஒப்பந்தக்காலம் முடிவுற்றதைத் தொடர்ந்து, மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை, ஏற்கனவே உள்ள ஒப்பந்த நிறுவனம் மூலமே பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளலாம் என அரியலூர் நகராட்சி நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளதை ஆவணத்தின் மூலம் அறியமுடிகிறது.

- மேலும் அரியலூர் நகராட்சி ஆணையாளரால் 01.05.2021 நாளிட்ட கடிதத்தின் மூலம் 124 தூய்மைப் பணியாளர்களை நியமனம் செய்வது தொடர்பாக புதிய ஒப்பந்தப்புள்ளி கோரும் கருத்துருவினை சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதையும், 124 ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களின் ஊதியமானது ஒப்பந்ததாரர் நிறுவனத்தின் மூலம் உரிய பணியாளர்களின் வங்கிக் கணக்கில் ECS மூலம் வழங்கப்பட்டுள்ளதையும் ஆணையர் சமர்ப்பித்த ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

- அரியலூர் நகராட்சியால் நியமனம் செய்யப்படும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களின் நியமனம் தொடர்பாக எவ்வித சந்தேகத்திற்கும் இடம் தராமல் இருக்கும் வகையிலும், பணியாளர்கள் தவறாது உரிய நேரத்தில் பணிக்கு வருவதை உறுதி செய்யும் வகையிலும், அரியலூர் நகராட்சியில் Bio-Metric Attendance System-த்தினை செயல்படுத்திட வேண்டும் என அரியலூர் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

- மேலும் கோல்டன் கேட்ஸ் குளோபல் பள்ளி நிர்வாகத்தினரால் புல எண் 584/3, கல்லேரிக் குட்டையில் 0.10.80 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நிலத்தினை மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பினை அகற்றும் பணியினை துரிதமாக உரிய சட்டவிதிகளின்படி மேற்கொள்ளுமாறு அரியலூர் நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

- மேற்காணும் சூழ்நிலையில், மனுதாரர் தனது மனுவில் தெரிவித்த புகாருக்கான ஆதார ஆவணங்களை முறையாக சமர்ப்பிக்கவில்லை. அவர் விசாரணையில் கலந்து கொள்ளவும் இல்லை. இந்நிலையில் அரியலூர் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.ஆ.முருகன்,
க.எண். 50, எண்ணெய்க்காரத் தெரு, அரியலூர் 621 704.

2) ஆணையாளர், அரியலூர் நகராட்சி,
அரியலூர் 621 704.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
தஞ்சாவூர் – 613 001.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

10/11/22
செயலாளர்

10/11/22